**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை**

**தஞ்சாவூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(26.10.2024 முதல் 30.10.2024)**

**அறிக்கைஎண் 60/2024** **தேதி. 25.10.2024**

**தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை**

தஞ்சாவூர் மாவட்டத்தின் 22.10.24 முதல் 24.10.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 32 - 34 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 26 - 28 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 87 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் வட கிழக்கு திசை வரை பதிவானது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை தஞ்சாவூர் (26.10.2024 முதல் 30.10.2024)**

| கடந்த வார வானிலை (22.10.2024 முதல் 24.10.2024) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 30.10.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 22/10 | நாள்-2 23/10 | நாள்-3 24/10 | தேதி | நாள்-1 26/10 | நாள்-2 27/10 | நாள்-3 28/10 | நாள்-4 29/10 | நாள்-5 30/10 |
| 0.9 | 4.5 | 0.0 | மழை (மி.மீ) | 26 | 6 | 0 | 1 | 2 |
| 32 | 33 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 33 | 33 | 34 | 34 |
| 27 | 26 | 28 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 28 | 27 | 26 | 26 | 27 |
| 6 | 6 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 3 | 7 | 7 |
| 87 | 84 | 80 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 90 | 72 | 78 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 12 | 12 | 12 | 10 | 10 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றுவீசும் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் மேற்கு | தென் கிழக்கு |

**தஞ்சாவூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 26.10.2024, 27.10.2024, 29.10.2024 மற்றும் 30.10.2024 ஆகிய தினங்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33 - 34 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 28 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10 - 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது | | வரும் நாட்களில் இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |
| | | மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும். |
| நெல் | நடவு வயல் | தாளடி பருவத்திற்கு மத்திய கால இரகங்களான ஆடுதுறை 38, ஆடுதுறை 46, ஆடுதுறை 49 மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, ஐ.ஆர். 20, அம்பை 19, பையூர் 1, திருச்சி 1, திருச்சி 3, கோ 48, கோ 49 மற்றும் கோ 50 ஆகியவை சாகுபடி செய்ய சிபாரிசு செய்யப்படுகிறது. |
| வாழை | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக கால்நடை தொழுவத்திலும் அதன் சுற்றியுள்ள பகுதிகளிலும் தண்ணீர் தேங்குவதை தவிர்த்து வடிகால் வசதி ஏற்படுத்தவும். தீவன பொருட்களை மழை நீரில் நனையாமல் பாதுகாக்கவும். வெளிப்புற ஒட்டுண்ணிகளை தவிர்க்க தேங்கி நிற்கும் மழை நீரை கால்நடைகள் குடிப்பதை தவிர்க்கவும் |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்

**இயக்குநர்**